ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2119/12 - 2019 අප්‍රේල් මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.18
*2119/12 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

மேல் மாகாண மாகாண சபையின் 2007 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் நியதிச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடு மற்றும் நிர்மாணிப்பு, தோட்ட உட்கட்டமைப்பு, கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சர் கெஜிடன் லலித் வனிகரத்ன ஆகிய நான், எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகள் அதிகார சபையின் ''சஹசர'' எனும் பெயரில் அறியப்படும் புதிய போக்குவரத்து முறை தொடர்பாக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விதிகள் இயற்றப்படுவதாக இத்தால் அறிவிக்கிறேன்.

கெஜிடன் லலித் வனிகரத்ன,
வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும்
வர்த்தக, வீடு மற்றும் நிர்மாணிப்பு, தோட்ட உட்கட்டமைப்பு,
வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர்,
மேல் மாகாணம்.

வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி
மற்றும் வர்த்தக, வீடு மற்றும் நிர்மாணிப்பு,
தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில்
மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு,
9 ஆம் மாடி,
இலக்கம் 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2019, ஏப்பிறல் 18.

1. இந்த விதியானது மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையின் "சஹசர" என்னும் பெயரில் அழைக்கப்படும் போக்குவரத்து நடைமுறைத் திட்டத்தின் விதி என அழைக்கப்படும்.

2. (i) அமைச்சரின் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் 36 மாதங்களுக்குள் மேல் மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையினால் மாகாணத்துக்குள் பஸ் வண்டிகளின் போக்குவரத்துப் பாதை ஒன்றை அல்லது பலவற்றை இணைத்துக் கொண்டு போக்குவரத்து அலகு ஒன்றை இனங்கண்டு பிரகடனப்படுத்தி முடிக்க வேண்டும் எனவும்,

(ii) பிரகடனப்படுத்திய போக்குவரத்து அலகை புதிய நடைமுறைத் திட்டத்திற்கு அமைவாக நிருவகிப்பதற்காக பஸ் சேவை முகாமையாளர் ஒருவரை நியமிப்பதற்கும்,

(iii) பிரகடனப்படுத்திய போக்குவரத்து அலகு ஒன்றுக்காக அல்லது பலவற்றுக்காக போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அலகொன்று எனத் தாபிப்பதற்கும்,

(iv) இந்த விதியின் கீழ் செயற்படுவதற்கு முன்னர் எந்த வீதியில் அல்லது வீதிகளில் நடைமுறைப்படுத்த வேண்டும் என வர்த்தமானப் பத்திரிகையிலும் மற்றும் பத்திரிகைகளிலும் பிரசுரிக்க வேண்டும் எனவும்,

3. (i) மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் போக்குவரத்து அலகு ஒன்றை பிரகடனப்படுத்திய திகதி தொடக்கம் அல்லது அதிகார சபையினால் விசேடமாக பணிக்கப்படுகின்ற காலப் பகுதிக்குள் அல்லது குறித்த போக்குவரத்து பாதையில் அல்லது பாதைகளில் அல்லது அனுமதிப்பத்திர உரிமையாளர்கள் குறித்த போக்குவரத்து அலகுக்காக குறித்த பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகார சபையினால் 2(ii) ஆம் பந்திக்கு அமைவாக நியமிக்கப்பட்ட முகாமையாளரின் நிருவாகத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றை அங்கீகரித்துள்ள போக்குவரத்துப் பாதையில் அல்லது பாதைகளில் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளை வழங்க வேண்டும் எனவும், குறித்த முகாமையாளரினால் பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் அவ்வப்போது பணிக்கப்படுகின்ற கால அட்டவணை மற்றும் ஒழுங்குறுத்துகைக் கட்டளைகள் மற்றும் சேவைத் தரங்களுக்கு அமைவாக பஸ் வண்டிகளை போக்குவரத்தில் ஈடுபடுத்த வேண்டும் எனவும்,

(ii) பஸ் வண்டிகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பயணிகள் போக்குவரத்தின் போது மற்றும் பொருட்கள் ஏற்றி இறக்கும் போது இலத்திரனியல் டிக்கட் இயந்திரத்தின் மூலம் உழைக்கின்ற அனைத்து வருமானங்களையும் தொழில்நுட்ப தடை காரணத்தால் இலத்திரனியல் இயந்திரம் இல்லாது உழைக்கின்ற டிக்கட் வருமானங்கள் மற்றும் பிற அனைத்து வருமானங்களும் பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அங்கீகரிக்கின்ற இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வர்த்தக வங்கியொன்றின் மூலம் "மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை" என்னும் கணக்கின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும் எனவும்,

(iii) பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அங்கீகரிக்கின்ற சிறந்த நிலையில் உள்ள ஜீ. பீ. எஸ். (G.P.S.), சீ. சீ. ரீ. வி. (C.C.T.V) மற்றும் ஜீ. பீ. ஆர். எஸ். (G.P.R.S) தொழில்நுட்பத்துடன் இலத்திரனியல் டிக்கட் இயந்திரம் ஒன்றைப் பொருத்தி பயன்படுத்துகின்ற சிறந்த நிலையில் உள்ள பஸ் வண்டிகளுக்கு மாத்திரம் பயணிகள் போக்குவரத்துக்காக அனுமதி வழங்கப்படல் வேண்டும் எனவும்,

(iv) தொழில்நுட்ப ரீதியான தடைகளின் போது அன்றி மற்றைய அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் பயணிகளிடம் கட்டணங்களை அறவிடும் போது இலத்திரனியல் அட்டை மூலம் மாத்திரமே அறவிடல்களை மேற்கொள்ளல் வேண்டும் எனவும்,

(v) பஸ் வண்டிகளில் பொருத்தப்பட்டுள்ள மற்றும் பாவனைகளுக்கு உட்படுத்தப்படுகின்ற இலத்திரனியல் தொழில்நுட்ப கருவிகளின் மூலம் தகவல்கள் மற்றும் தரவுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்காக முழுமையான போக்குவரத்து கட்டுப்பாட்டு அறையொன்றை நிறுவிப் பேணப்படல் வேண்டும் எனவும் குறித்த தகவல்கள் மற்றும் தரவுகளை கையகப்படுத்தல், பாதுகாத்தல் மற்றும் பஸ் வண்டி சேவைகளின் வினைத்திறனுக்காக பயன்படுத்துதல் வேண்டும் எனவும்,

(vi) ஒவ்வொரு போக்குவரத்துப் பாதையிலும் அல்லது பாதைகளிலும் போக்குவரத்து வீதி வகுப்பின் ஊடாக பஸ் வண்டி பயணிக்க வேண்டிய ஆகக் குறைந்த கிலோமீற்றர் அளவு மற்றும் அந்தந்த போக்குவரத்து வீதியில் கிடைக்கின்ற வருமானங்கள் மற்றும் வழங்குகின்ற பயணிகள் போக்குவரத்து சேவைகளின் தரங்களின் அடிப்படையில் குறித்த ஒவ்வொரு போக்குவரத்துப் பாதையிலும் அல்லது போக்குவரத்துப் பாதைகளின் வகுப்பிலும் பயணிக்கின்ற பஸ் வண்டி உரிமையாளர்களுக்காக குறித்த பயணத்துக்காக கிலோ மீற்றர் ஒன்றுக்கு செலுத்தக் கூடிய ஆகக் கூடிய ரூபாக்களின் அளவு மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அவ்வப்போது பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் எனவும்,

(vii) தமது பஸ் வண்டியில் சேவையாற்றுகின்ற ஊழியருக்காக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான பங்களிப்புத் தொகையை முறையாகச் செலுத்தியுள்ளதாக குறிப்பிடும் ஆவணங்களை சமர்ப்பிக்கின்ற உரிமையாளர்களின் பஸ் வண்டிகளுக்கு மாத்திரமே பயணத்துக்கான அனுமதியை வழங்க வேண்டும் எனவும்,

(viii) போக்குவரத்துப் பாதையில் அல்லது பாதைகளில் வகுப்பில் பயணிக்கின்ற பஸ் வண்டிகளில் இலத்திரனியல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பொருத்தியதன் பின்னர் 02 மாத காலத்துக்கு உரியவாறு பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பஸ் வண்டிகள் மாத்திரம் "சஹசர" போக்குவரத்துத் திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும் எனவும் ,

(ix) பஸ் வண்டிகளில் குழாத்திற்கு "சஹசர" என்னும் நாமத்தை இடல் வேண்டும் எனவும்;

(x) போக்குவரத்துக் கட்டுப்பாட்டு அறையின் முகாமைத்துவத்தை பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் அல்லது அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பஸ் சேவை முகாமையாளர் ஒருவரினால் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும்;

(xi) போக்குவரத்து சேவைகளில் சிறந்த வினைத்திறன் மற்றும் சரியான டிக்கட் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என பரிசோதிப்பதற்கு பரிசோதனைக் குழுவொன்றை நியமித்து அவர்களுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவதனை பயணிகள் போக்குவரத்துச் சேவை அதிகார சபையினால் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும்;

(xii) பொது மக்களின் முறைப்பாடுகள் வினைத்திறனுடன் முகாமைப்படுத்திக் கொள்ளுவதற்கு பொருத்தமான அலகு ஒன்றை அதிகார சபையின் கீழ் தாபிக்க வேண்டும் எனவும்;

(xiii) இலத்திரனியல் கொடுப்பனவு அட்டையை பயன்படுத்துவதனை பிரபல்யப்படுத்துவதற்குத் தேவையான ஊக்குவிப்புகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் ;

4. மேலே குறிப்பிட்ட 2 மற்றும் 3 ஆவது கட்டளைகளை உடனடியாக நடைமுறைப்படுத்தும் பொருட்டு இந்த வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் மேல் மாகாணத்தின் அனைத்து போக்குவரத்துப் பாதைகளுக்கும் இதனை ஏற்புடையதாக்கிக் கொள்ளுவதற்கும்,

5. சேவைகளின் தரக் கட்டுப்பாடுகள் மற்றும் பயணிகளின் சொகுசு வசதிகள் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மற்றும் புதிய சேவைகளை அறிமுகப்படுத்துவது தொடர்பிலுமான அனைத்து தீர்மானங்களையும் எடுக்கும் உரிமை மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்கு உரியது எனவும்,

6. (i) பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபையினால் தொழில்நுட்ப மற்றும் நிதிக் கணக்காய்வுக்காக தகைமை பெற்ற கணக்காய்வாளர்களைப் பிரகடனப்படுத்தி போக்குவரத்து அலகு கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்;

(ii) குறித்த கணக்காய்வு அறிக்கையைப் பஸ் வண்டி போக்குவரத்து அனுமதிப்பத்திர உரிமையாளருக்கு தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றை பரிசீலனை செய்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்தல் வேண்டும்.

(iii) மேலும் குறித்த வருடாந்த கணக்காய்வு அறிக்கையை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஊடாக மாகாண சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

5-77

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.